**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வீட்டுவசதி - கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் நிலுவையிலுள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.06.2006-ஆம் தேதிக்குள் முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்தும் இதன் தொடர்பாக முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (கூட்.1)துறை**

அரசாணை(நிலை)எண். 129 நாள் 12.04.2005

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை)எண். 49 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,, நாள். 20.2.2004.

2. அரசாணை (நிலை) எண்.340, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 7.9.2004.

3. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் கடித எண் 10465/2005/ஆ4, நாள் 5.3.2005.

ஆணை:

பிரதம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் அங்கத்தினர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைத் தொகையை உரிய காலத்தில் செலுத்தாததால் அங்கத்தினர்கள் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டிக்கு அபராத வட்டி கணக்கிடுவதன் மூலம் அங்கத்தினர்கள் சுமை கூடுதலாகின்ற நிலையைதவிர்த்திட மேலே பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்பட்டன.

1) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் 1.10.2003-ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.4.2004-ஆம் தேதிக்குள் சங்கத்திற்கு முழுமையாக செலத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவை கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

2) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 1.10.2003 அன்றுள்ளவாறு நிலுவையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30.4.2004-ஆம் தேதிக்குள் முழுமையாக செலுத்தும் பட்சத்தில் அச்சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

3) மேலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் இதுபோன்ற கடந்த கால வருவாய் இழப்பிற்கு இனி அரசு நிதியுதவி வழங்காது.

மேற்சொன்ன சலுகையை பயனீட்டாளர்கள் முழுமையாக பெற இயலாததினால் கால அளவு 30.4.2004-லிருந்து 31.10.2004 வரையில் நீட்டிப்பு செய்து மேலே 2-ல் கண்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. அரசு அறிவித்த வட்டிச் சலுகை 31.10.2004-உடன் முடிவடைந்ததை கருத்திற்கொண்டும், தவணை தவறிய கடன்தாரர்கள் தங்களின் தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை சங்கத்திற்கு திருப்பிச் செலுத்த மேலும் கால அவகாசம் கேட்டுள்ளதை கருத்திற்கொண்டும், தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் கடுமையை கருத்திற்கொண்டும், தவணை தவறிய அங்கத்தினர்கள் 31.3.2005ம் தேதியில் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 31.3.2006 வரை செலுத்துவதற்கு ஏதுவாக அபராத வட்டி தள்ளுபடி சலுகை காலத்தை 31.3.2006 வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்குமாறும் இதனால் தமிழகம் முழுவதும் 1,83,739 தவணை தவறிய உறுப்பினர்கள் ரூ.113.59 கோடி அளவிற்கு பயன் பெறுவார்கள் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பதிவாளரின் பரிந்துரையை கவனமாக பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையினை அரசு வெளியிடுகிறது.

(1) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் 31.3.2005-ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.6.2006-ஆம் தேதிக்குள் சங்கத்திற்கு முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவை கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

(2) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 31.3.2005 அன்றுள்ளவாறு நிலுவையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30.6.2006-ஆம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் அச்சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

(3) 31.03.2005ம் தேதியில் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30.06.2006ம் தேதிக்குள் திருப்பி செலுத்தும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி விகிதம், தற்போது அதிகபட்சமாக வசூலிக்கப்படும் 17 சதவிகித வட்டி விகிதத்திலிருந்து 11 சதவிகிதமாக குறைக்கப்படும்.

4. இத்திட்டத்தை செயல்படுத்தத் தேவையான வழிகாட்டி நெறிமுறைகள் (Guidelines) வீட்டு வசதி கூட்டுறவு சங்கப் பதிவாளர் அவர்களால் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ,
அரசு செயலாளர்

பெறுநர்

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர்,சென்னை.20.
தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சென்னை.7.
அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் வீட்டுவசதி கூட்டுறவு

சங்கங்களின் பதிவாளர் மூலமாக.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை.9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர்(பெயரில்), சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர்(தணிக்கை), சென்னை.35.
மாநில கணக்காய்வுத் தலைவர்(சி.ஏ.எஸ்), சென்னை.9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர்(வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி)அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர்(நிதி), சென்னை.9.
அரசு செயலரின் நேர்முக உதவியாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை.9.
ஆளுநரின் தனிச் செயலர், சென்னை-32
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.